IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# திருக்குறள் உணர்த்தும் குடும்பநெறி

**நெறியாளர்**

**முனைவர் ஏ. வீரப்பன்**

இணைப்பேராசிரியர்

தமிழியல்துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகர்

**ஆய்வாளர்**

**ஆ. இரமேஷ்குமார்**

முனைவர் பட்ட ஆய்வாளர்

தமிழியல்துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகர்

**ஆய்வுச்சுருக்கம்**

மனித சமுதாயத்தின் உயிர் நாடியாக விளங்குவது குடும்பம். குடும்ப அமைப்பில் முக்கிய இடம் பெறுபவர்கள் கணவனும் மனைவியும் ஆவார். இல்லறம் நல்லறமாக மாற வேண்டுமானால் கணவனும் மனைவியும் அறவழியில் செயல்பட வேண்டும். இல்லற வாழ்வில் மக்கட்செல்வம் சிறந்த செல்வமாகக் கருதப்படுகிறது. மக்கள் தங்கள் வாழ்வியல் நெறிமுறைகளில் விருந்தினரை உபசரித்தல் என்பதையும் சுற்றத்தார்கள் சுற்றி வாழும்படி அன்பும் ஆதரவும் கொண்டு நடக்க வேண்டும் என்பதை மையப்பொருளாகக் கொண்டு இவ்வாய்வுச் சுருக்கம் அமைகின்றது.

**முன்னுரை**

சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அறநூல்களில் ஒன்றாகத் திருக்குறள் அமைந்துள்ளது. இதிலுள்ள ஒவ்வொரு குறளும் இரண்டு அடிகளால், ஏழு சீர்களைக் கொண்டு இயற்றப்பட்டன. பல்வேறு உலகியல் வள்ளுவத்தில் இடம்பெற்றுள்ள செய்திகள் அறிவியல் நோக்கில் பேசப்பட்டுள்ளன. குறிப்பாக மனிதன் அறவழியில் செல்ல வேண்டும் என்பதை முதன்மையாகக் கொண்டு வள்ளுவர் கூறும் கருத்தக்களை பதிவு செய்துள்ளார். அக்கருத்துக்களில் இல்லறம் பற்றிய கருத்துக்களும் அடங்கும்.

**இல்வாழ்க்கை**

இல்லறம், இல்லின்கண் இருந்து தானம் முதலாயின் செய்தல் என மணக்குடவரால் விளக்கப்படுகின்றது.[1] இல்லறவியலில் முதல் மூன்று அதிகாரங்களான இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், புதல்வரைப் பெறுதல் என்பன குடும்ப வாழ்வின் அடிப்படைகளை விரித்துரைக்கின்றன. இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில்,

1. இல்வாழ்வானின் கடமைகள்
2. இல்வாழ்க்கையின் நெறி
3. இல்வாழ்க்கையின் சிறப்பு

என்பவை வரித்துரைக்கப்படுகின்றன. இல்வாழ்வான் என்பவன் பிரமசரிய ஒழுக்கத்தான், வானப்பிரத்தன், முற்றும் துறந்த யோக ஒழுக்கத்தான் என்போருக்கும் துறவிகள், நல்கூர்ந்தார், தன்பால் வந்திரந்தார் என்போருக்கும் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்ற வேண்டியவன். மேலும் தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவரையும் பாதுகாக்க வேண்டியவன் இல்வாழ்வான் என்கிறது குறள். தன்னைப் பாதுகாத்தலையும் கடமைகளிலொன்றாக வள்ளுவர் குறித்திருப்பது சிறப்பானது (41:43).

இல்வாழ்க்கைக்குரிய நெறியாக பழி அஞ்சுதல், பகுத்துண்ணுதல், அன்பும் அறமும் உடைத்தாக வாழ்தல், அறவழி இல்வாழ்க்கையாற்றுதல் என்பவற்றைக் கூறுகின்றார் (44:46).

இத்தகைய இல்வாழ்க்கை வாழ்பவன் தவநெறியிற் சென்று பெறுவது ஒன்றும் இல்லை. புலன்களை விட முயல்பவரை விட, தவம் மேற்கொள்பவரை விட முறையான வழியில் இல்வாழ்க்கை நடத்துபவன் சிறந்தவன். வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் (46, 47, 50) என்று இல்வாழ்வான் சிறப்புகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

**வாழ்க்கைத் துணைநலம்**

இல்லற வாழ்க்கை சிறப்பதற்கு இன்றியமையாதது வாழ்க்கைத் துணைநலம். இதனை வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியது பெண்மை இலக்கணம் கூறுவது என மணக்குடவர் கூறுகிறார்.[2]

மனையாளுக்கு இருக்க வேண்டிய ஒழுக்கம், மனைமாட்சி மாண்பு, மனைத்தக்க மாண்பு என்று குறிப்பிடப்படுகின்றது. மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள் என இதனை விளக்கும் பரிமேலழகர் துறந்தார்ப்பேணல், விருந்தயர்தல், வறியார் மாட்டருளுடைமை, வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தல், அட்டிற் தொழில் வன்மை, ஒப்புரவு செய்தல் போன்றவற்றைச் சிறப்புடையனவாகக் காட்டுகின்றார்.[3]

வள்ளுவர்,

"கணவனது வருவாய்க்குத் தக்க வாழ்தல்" (51)

"கற்பெனும் திண்மை பெறுதல்/கற்பைக்காத்தல்" (54)

"பிற தெய்வம் தொழாது கணவற் தொழுதல்" (55)

"கணவனைப் பேணுதல்" (56)

"புகழ் நீங்காமல் காத்தல்" (59)

"கற்பால் தன்னைக் காத்துக் கொள்ளுதல்" (57)

என்ற பண்புகளையும் இல்லாளுக்குரியவைகளாகக் காட்டுகிறார்.

மகளிரது ஒழுக்கம் சிறைக்காவலால் பாதுகாக்க முடியாதது. அது மகளிரது நிறை என்ற பண்பாலேயே காக்கப்பட முடியும் என (57) ஒரு பெண்ணின் மன உண்மையே அவளுக்குப் பாதுகாப்பு என்பதைத் தெளிவுப்படுத்துகிறார்.

கற்பொழுக்கத்தால் புகழ் பெற்ற மனைவியை உடையவனே இகழ்வார் முன் ஏறு போற்பீடுநடை இடமுடியும் எனக் குணம் சான்ற மனைவி ஒருவனுக்கு பெருமை சேர்த்தலையும் (59),

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"[4]

என நல்ல மனைவியும். நல்ல புதல்வரும் ஒருவனுக்கு அணிகலமாக அமைதலையும் விளக்குகிறார் வள்ளுவர்.

**மக்கட்பேறு**

மக்கட்பேறு என்ற அதிகாரம் மக்கள் எவ்வாறு அமைய வேண்டும், அவர்களால் பெறும் இன்பம், பெற்றோரது கடமை, மகனது கடமை என்பவற்றை வலியுறுத்துகின்றது.

மக்கள் அறிவுடையவர்களாய் அமைதல் வேண்டும். பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களை உடையவர்களாதல் வேண்டும் என விளக்குவாரர் வள்ளுவர்.

குழந்தைப்பேற்றால் அவர்தம் இளமைப் பருவத்தில் பெறும் இன்பத்தை,

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"[5]

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"[6]

என்று அழகுற விளக்குவார் வள்ளுவர்.

வளர்ச்சியுள்ள மக்களால் பெறும் இன்பத்தைச் சான்றோன் என மகன் பிறரால் புகழப்பெறுதலால் தாய்க்கு ஏற்படும் மகிழ்ச்சி, தம்மின் தம் மக்கள் அறிவுடைமை தமக்கும் மற்றோருக்கும் இன்பம் பயத்தல் என்றிரு வகைகளாக (69, 68) விளக்குகின்றார்.

இறுதியாக மகன் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையாக "இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்லைப் பெற்றோர்க்குத் தேடித் தருதல்" (70) என்பது குறிப்பிடப்படுகின்றது.

மகனுக்குப் பெற்றோர் செய்யவேண்டிய கடமையாக "அவையத்து முந்தியிருப்பச் செயல்" (67), கற்றார் அவையின்கண் அவரினும் முந்தியிருக்குமாறு அவரை விடக் கல்வியுடையனாக்குதல் என்பதை வள்ளுவர் காட்டுகின்றார்.

**அன்புடைமை**

இல்லற வாழ்விற்கு அடிப்படையானது அன்பு. வாழ்க்கைத்துணயும் புதல்வரும் முதலிய தொடர்புடையார் கண் காதலுடையனாதல் என்றும் இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கள்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாகவே என்றும் அன்புடைமை விளக்கப்படுகின்றது.[7]

வாழ்விற்கு அடிப்படையாய் அமைவது அன்பு. அன்பு அனைத்து சமயத்தவராலும் போற்றப்படுவது. "உன்னைப்போல் பிறனையும் நேசி" என்னும் விவிலிய வரி அனைவரிடத்திலும் அன்பு காட்டுதலை வலியுறுத்துகின்றது. அன்புடைமை என்ற அதிகாரத்தில் அன்புடைடைமையின் தன்மை, அதன் சிறப்பு, அது இல்வழிப்படும் குற்றம் ஆகியவை விளக்கப்படுகின்றன. அன்பினது தன்மையை,

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்"[8]

எனவும், அன்பின் சிறப்பை அன்பு செய்வது வாழ்க்கைக்கு இன்றியமையாதது (73), அன்பு நட்பைத் தரும் (74), அன்புடன் கூடிய இல்லறம் பின்பு துறக்கம் செல்லும் பேரின்பத்தைத் தரும் (75), மறத்திற்கும் அன்பே துணை (76) எனவும் குறள்கள் எடுத்துரைக்கின்றன. அன்பில்லாதவரை அறம் தண்டிக்கும் (77), அன்பு இல்லாதவர் மனம் பட்ட மரம் போன்றது (78), அன்பு இல்லாதவர் அகத்துறுப்பு இல்லாதவர் (79) என அன்பற்றவரின் இழிவு கூறப்படுகின்றது.

**விருந்தோம்பல்**

இல்லறத்தில் அமையும் அன்பின் வெளிப்பாடாக அமைவது விருந்தோம்பல். விருந்தோம்பல், வேறாகாத அன்புடையிருவர் கூடிச்செய்வது என விளக்கும் பரிமேலழகர் முன்பே அறிந்து வரும் விருந்தினர், அறியாதாராயிருந்து வரும் விருந்தினர் என இருவகை விருந்தினரைக் குறித்துக் கூறுகின்றார்.[9]

விருந்தினரைப் பேணி அவர்க்கு உபகாரம் செய்தலே இல்வாழக்கையின் நோக்கம் (81) என்றும் விருந்தினன் ஒருவன் இல்லின் புறத்ததாக அமையத் தான் ஒரு பொருளை விரும்புதல் சாவா மருந்தெனினும் வேண்டாம் (82) என்றும் விருந்தோம்பலின் சிறப்பு உரைக்கப்படுகின்றது.

விருந்தோம்பலால் பெறும் பயன்களாக விருந்தோம்புபவனுக்கு நல்குரவு இல்லை (83), அவன் வீட்டில் திருமகள் வாழ்வாள் (84), அவன் நிலம் தானே விளையும் (88), வானோர்க்கு அவன் நல்விருந்தாவான் (86) என்பவற்றை வள்ளுவர் நவில்கின்றார்.

விருந்தோம்பலின் இன்றியமையாப் புண்பு முகம் திரியாமை அல்லது முகனமர்ந்து நல்விருந்தோம்புதல் (84) என இன்முகம் காட்டுதலின் சிறப்பை எடுத்துரைக்கிறார்.

**இனியவை கூறல்**

இனியவை கூறல் விருந்தோம்பலுடன் சேர்ந்து நினைக்கப்படுவது. கேட்டார்க்கு மனமகிழும் சொற்களைக் கூறுதல் (மணக்குடவர்), யாவர்க்கும் இனியவை சொல்லுதல் (பரிதியார்), மனத்தின் கண் உவகையை வெளிப்படுவனவாகிய இனிய சொற்களைக் கூறுதல் (பரிமேலழகர்) என்று பல நிலைகளில் இது விளக்கப்படுகின்றது.[10]

திருக்குறள் இன்சொல் என்பதை அன்பு கலந்து குற்றமற்ற அறத்தை உணர்ந்தவர்கள் வாயிலிருந்து பிறக்கும் சொற்கள் என வரையறுக்கின்றது (91), இனிய முகத்தோடு இன் சொற்களைப் பேசுவதே அறம் என விருந்தோம்பலுக்கு இன்சொலின் இன்றிமையாமை (92, 93) எடுத்துரைக்கப்படுகின்றது. இன்சொல்லின் பயன்களாக, வறுமை இன்மை (94), அழகு பயத்தல் (95), தீயவை தேய அறம் பெருகுதல் (96), இம்மைக்குப் பொருளையும் மறுமைக்கு அறத்தையும் உண்டாக்குதல் (97), இருமையிலும் இன்பம் பயத்தல் (98) என்பவை தொகக்கப்படுகின்றன. இனிய சொற்கள் இருக்கும் போது கடுஞ் சொற்களைக் கூறுதல் தகாது; அது 'கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' (100) என்ற கருத்து இறுதியில் வலியுறுத்தப்படுகின்றது.

**தொகுப்புரை**

அற இலக்கியத்தில் மிகவும் இன்றியமையாத கருத்துக்களை வள்ளுவமே முன்மொழிந்துள்ளது. ஏனைய அறநூல்கள் அவற்றைப் பின் தொடர்ந்துள்ளன.

இல்லறம் நல்லறமாக மாறவேண்டுமானால் கணவனும் மனைவியும் அறவழியில் செயல்படவேண்டும். இல்லற வாழ்வில் மக்கட் செல்வம் சிறந்த செலவ்மாக கருதப்படுகிறது. வாழ்விற்கு அடிப்படையாய் அமைவது அன்பு. அவ்வகையில் குடும்ப அமைப்பில் கணவன் – மனைவி அன்பு என்பது சரியான இலக்கை நோக்கி செல்லப் பயன்படுகிறது.

மக்கள் தங்கள் வாழ்வியல் நெறிமுறைகளில் விருந்தினரை உபசரித்தல் என்பதனையும், கேட்பார் மனமகிழும் இனிய சொற்களை பேசவேண்டும் என அறநூல்கள் வலியுறுத்துகின்றன.

**முடிவுரை**

திருக்குறள் இல்லறத்தோடு தொடர்புடைய குடும்ப வாழ்க்கை பெண்ணிற்கு சிறப்பு சேர்ப்பதை அறிய முடிகிறது. மனித சமுதாயத்தின் உயிர் நாடியாக விளங்குவது குடும்பம்.

குடும்ப அமைப்பில் முக்கிய இடம் பெறுபவர்கள் கணவனும் மனைவியும் ஆவர். இல்லறம் நல்லறமாக மாற வேண்டுமானால் கணவனும் மனைவியும் அறவழியில் செயல்பட வேண்டும். மேலும் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவைகூறல் என்ற ஆறும் குடும்ப வாழ்க்கையை மையமிட்டு எழுகின்றன என்பதை அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப. 38.
2. மேலது., ப. 41.
3. மேலது., ப. 61.
4. திருக்குறள் எண். 60.
5. மேலது., 64.
6. மேலது., 65.
7. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப. 69.
8. திருக்குறள் எண். 71.
9. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், பக். 76, 77.
10. மேலது., ப. 84.

**துணைநூற்பட்டியல்**


1. எம்.ஏ. இராமசுப்பிரமணியம் (உ.ஆ.), பதினெண் கீழ்க்கணக்கு (தொகுதி-1), செல்லப்பா பதிப்பகம், மதுரை-625 001, முதற்பதிப்பு-2009.
2. எம்.ஏ. இராமசுப்பிரமணியம், (உ.ஆ.), பதினெண் கீழ்க்கணக்கு (தொகுதி-3), செல்லப்பா பதிப்பகம், மதுரை-625 001, முதற்பதிப்பு-2009.
3. திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால், பதிப்பாளர் திருப்பனந்தாள், ஸ்ரீ காசி மடம், முதற்பதிப்பு-1957.